கண் பார்வை அற்றோர் கிரிக்கட் விளையாடுகின்றார்கள் என்றால் அது நம்புவது கடினம். ஆனால் அவ்வாறானதொரு புதிய முயற்சியை இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கு எங்கிலும் வாழும் தமிழ் மாற்றுத் திறனாளிகள் முன்னெடுக்கின்றார்கள். ஓசை கொண்ட பந்து அவர்களுக்கு உதவுகின்றது.

அவ்வாறான விழிப்புலன் பாதிக்கப்பட்டோர் விளையாடும் சத்தப்பந்து கிரிக்கட் போட்டி செவ்வபய்க்கிழமை 08.01.2017 யாழ் கனகரத்தின மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது..

தமிழ் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டி 2017 இல் விழிப்புலன் பாதிக்கப்பட்டோருக்கான சத்த பந்து கிரிக்கெட் போட்டி இடம்பெற்றது.

சத்தப்பந்து கிரிக்கட் போட்டிகள் வடக்கு வாழ் விழிப்புலன் பாதிக்கப்பட்டோர் அணிக்கும் கிழக்கு வாழ் விழிப்புலன் பாதிக்கப்பட்டோர் அணிக்கும் இடையில் நடைபெற்றது..

இப்போட்டிகளை யாழ் விழிப்புணர்வற்றோர் சங்கம் ஏற்பாடு செய்கின்றது அதற்கான அனுசரனையை லண்டணை தளமாகக் கொண்டியங்கும் நம்பிக்கை ஒளி அமைப்பு வழங்குகின்றது.

முற்றிலும் கண்பார்வை இழந்தவர்கள் இவ்வாறான ஒரு விளையாட்டுக்காக தாம் மைதானத்தில் இறங்கும் போது கவலைகளை மறந்து ஒரு புதிய உத்வேகத்தை அடைகின்றோம் என பெருத்த நம்பிக்கையோடு காத்திருகின்றார்கள்